Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 02 (07.12.2002) சனிக்கிழமை இதழ் : 67

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003

விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள !
கணனிக்கல்விக்கு தனித்துவம மிக்க IIS நிறுவனத்தில
இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள்
அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

## சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு

# அரசு - புலிகள் இணக்கம்

# சர்வதேச சமூகம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சில், சமஷ்டி ரீதியிலான தீர்வுக்கு இருதரப்பும் இணங்கியமைக்கு, சர்வதேச சமூகம் பெரும் பாராட்டுக்களை இரண்டு தரப்பினரிடமும் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், போன்ற மேற்குலக நாடுகளும் சர்வதேச உதவி அமைப்புக்களும் இந்த இணக்கநிலை தமக்கு உற்சாகத்தைத் தருவதாக அறிவித்துள்ளன. ஜப்பானிய அரசு, இந்த இணக்க நிலைக்கு பரிசாக பெருமளவு நிதி உதவியை அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

## விண்ணாணம் விநாசியர்




அகிலமே பாராட்டேக்குள்ள அயல்நாட்டிட மௌனம் அழுங்குப் பிடிவாதத்தக் காட்டுது...

## பேச்சின் முன்னேற்றத்துக்கு பிரிட்டிஷ் அமைச்சர் பாராட்டு

(லண்டன்)

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்கிடையேயான பேச்சுக்கள் வழியாக - முக்கியமான முன்னேற்றமொன்றை எட்டியிருப்பதைத் தாம் வரவேற்பதாக- பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மைக் ஓ ப்ரெய்ன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இரண்டு தரப்பினரும் இணைந்து- தமிழ் மக்களுக்கான உள்ளக சுய நிர்ணய உரிமையுடனான சமஷ்டிக் கட்டமைப்பை, ஒன்றுபட்ட இலங்கைக்குள் உருவாக்கத் தீர்மானித்திருப்பது பாராட்டத்தக்கது.

அமைதிப் பேச்சுக்களில் பெண்களின் தேவைகள், முன்னுரிமைகள் பற்றியும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நிலை தொடர்பாகவும் - இருதரப்பும் கவலை கொண்டுள்ளமையும் முக்கியமானது.

இரண்டு தரப்புக்களும் - இணைந்து, அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ பேச்சு முடிவுகள் இந்திய அரசு மௌனம்!

(கொழும்பு)

ஒஸ்லோ பேச்சுகளில் அரசும் புலிகளும் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் கண்டது குறித்து இந்திய அரசுத் தரப்பிலிருந்து எந்தவிதக் கருத்தும் வெளியாகவில்லை.

இந்த இணக்கம் தொடர்பாக ஆழ்ந்து பரிசீலிக்கிறோம். புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு என மட்டும் இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கை ஜனநாயகமானது அல்லவாம் - சுவாமி

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமஷ்டி ஆட்சி முறை குறித்து இணக்கம் காணப்பட்டமையை இந்தியா ஏற்றுக்கொள்ளாதென- ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். இது இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மட்டுமே கண்ட இணக்கம். இதில் ஏனைய கட்சிகள் பங்குபற்றவில்லை. எனவே, இது ஜனநாயக ஒப்பந்தமில்லை.

புலிகள் -இந்தியாவின் எதிரிகள், எனவே புலிகள் சம்பந்தப்பட்ட இந்த இணக்க நிலையில் இந்தியா சம்பந்தப்பட மாட்டாது எனவும் சுவாமி மேலும் தெரிவித்தார்.

## நெடுந்தீவில் கடற்படைத் தளமா? உடன்படிக்கை மீறும் செயல்!

### கண்காணிப்புக் குழுவுக்கு இளம்பரிதி கடிதம்

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 10 மாதங்கள் நெருங்குகின்ற நிலையில், நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. எனும் ஆயுதக் குழுவினருக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம் என்ற போர்வையில், யுத்த நிறுத்த உடன்படிக்கை விதிகளை மீறி, கடற்படையினர் நிலைகொண்டிருப்பதனை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். தொடர்ச்சியாக 21 நாட்களாக கடற்படையினர் அங்கு நிலைகொண்டிருப்பது கடற்படைத் தளத்தை அமைப்பதற்கு ஒத்ததாகும். இச்செயல் புரிந்துணர்வு உடன்படிக்கையை உதாசீனம் செய்யும் செயலாகும் என விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நான் இல்லாத நிலையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தான் இல்லாத நிலையில் ஒஸ்லோ பேச்சுகளில் அரசும்-புலிகளும் சமஷ்டி அரசியலமைப்பு குறித்து இணக்கம் கண்டதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி முறையை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்கின்றனர் எனினும் இது குறித்து கட்சி இன்னமும் தீர்க்கமான முடிவுக்கு வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இணக்க நிலை குறித்து - ஜே.வி.பி, சிஹல உறுமய என்பன இதுவரை கருத்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தொடர்பான நிலைப்பாடு இந்தியா மறுபரிசீலிக்க வேண்டும்

### ம.தி.மு.க. அவைத்தலைவர் கணேசன்

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்பட்ட, விடுதலைப் புலிகள்-இலங்கை அரசுடன் கண்ட இணக்கப்பாட்டிற்கு இந்திய அரசு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என ம.தி.மு.க அவைத்தலைவர் எல்.கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

புலிகள் குறித்து இந்தியா தன் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நெடுந்தீவு சென்றனர்



நெடுந்தீவில் மக்களிடையே உரையாற்றுகிறார் மாவை.

(நெடுந்தீவு)

தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று எம்.பிக்கள் நேற்று நெடுந்தீவு சென்றனர். அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார், மாவை. சேனாதிராஜா ஆகிய எம்.பிக்கள், யாழ். கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் நேற்று நெடுந்தீவு சென்றிருந்தனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## இன வன்முறையை தூண்டாது விழிப்புடன் செயற்பட வேண்டும்

### ஜனாதிபதி சந்திரிகா கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளும் இலங்கை அரசியலில் தீர்க்கமான ஆண்டுகள். இக்காலப் பகுதியில் இனவாதிகள் வன்முறையைத் தூண்டலாம் எனவும் இக்காலப்பகுதியில் மக்கள் மிகவும் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு வருட ஆட்சிக்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

### எழுதுநர் சேவை போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

நடைபெறவுள்ள எழுதுநர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் மாதிரி "நுண்ணறிவு" - வினாத்தாள நாளையதினம் நமது ஈழநாட்டில் பிரசுரமாகவுள்ளது.

SERENDIB
விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# ஈராக்கை இலகுவில் விடப்போவதில்லை ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளது!

## அமெரிக்க வெளியுறவுச் செயலர் எச்சரிக்கை



சதாம் ஹுசைன் அரசாங்கம் பேரழிவு தரும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக புஷ் நிர்வாகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தம்மிடம் இருக்கும் ஆயுத விபரங்களை வெளியிட வேண்டிய இறுதித் திகதியாக இருந்தபோதும், ஈராக் தம்முடன் ஒத்துழைக்கவில்லை என ஆயுதப்பரிசோதகர்கள் விசனம் வெளியிடத் தொடங்கியுள்ளனர். இவ்வாறான கூற்று ஈராக் அரசாங்கத்தினை அழுத்தத்திற்குள்ளாக்கும் என நம்பப்படுகிறது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் - ஜெக்ஸ்ரோக் - தமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின்படி, ஈராக் ஆயுதங்களை பதுக்கி வைத்திருப்பது உறுதியாயுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஜெக்ஸ்ரோன் மேலும் தெரிவிக்கையில், தாம் ஈராக்கினை இலகுவில் விடப்போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை- சதாம் ஹுசைன், தனது மக்களை -ஆயுதப்பரிசோதகர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டதோடு, ரம்சான் பண்டிகையின்போது அமெரிக்காவின் நீதியற்ற செயலை விளங்கிக் கொள்ளுமாறும் தமது மக்களைக் கேட்டுள்ளார்.

# மியாமி வங்கி கட்டடம் மீது சிறுரக விமானம் மோதியது



மியாமியின் மத்திய வங்கிக் கட்டடத்தின் மீது ஒற்றை இயந்திர சிறிய விமானமொன்று மோதியதில், அதன் விமானி பலியாகியுள்ளார். விமானத்தில் பயணம் செய்த பன்னிரெண்டு வங்கி ஊழியர்கள் தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றித் தப்பியுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பாக தேசிய போக்குவரத்துப் பாதுகாப்புச் சபை ஆராய்ந்து வருகின்றது. இவ்விபத்தினைச் சாதாரண விபத்து என மேற்படி சபை அறிவித்துள்ளதுடன், இச்சிறிய விமானம் ஒரு பரிசோதனை முயற்சியாகவே உருவாக்கப்பட்டதாகவும் தேசிய போக்குவரத்துப் பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

விமான விபத்தினால் வங்கியின் கட்டடத்தின் உட்பகுதியில் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



காஸாவில் இஸ்ரேலிய சோதனைச் சாவடி ஒன்றில் இஸ்ரேலியப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனியர்கள்.

## உலகவலம்

### காஸா அகதிமுகாம் மீது இஸ்ரேல் ஷெல் தாக்குதல்; ஒன்பது பேர் பலி!

காஸா நகரிலுள்ள பலஸ்தீன அகதி முகாமின் அருகில் நடந்த சண்டையொன்றில், இஸ்ரேல் தாக்குதலில் ஒன்பது பலஸ்தீனப் பொது மக்கள் கொலலப்பட்டுள்ளனர்.

இரண்டு மாடிக்கட்டடமான அகதி முகாமில் இஸ்ரேலிய கவசவாகனம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் - கட்டடம் சேதமானதுடன் பலஸ்தீனப் பாதுகாப்பு ஊழியர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 5 பொதுமக்கள் உட்பட 10 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் காயமடைந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சையின்போது மரணமானதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஆயுதம் ஏந்தாத பொதுமக்களிற்கு எதிரான இஸ்ரேலிய இராணுவத்தினரின் புதிய படுகொலைகளே இவை என பலஸ்தீனப் போராளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# எதியோப்பிய, கென்ய தலைவர்கள் ஜனாதிபதி புஷ்ஷைச் சந்திப்பு



(வொஷிங்டன்)

எதியோப்பியா மற்றும் கென்ய நாட்டுத் தலைவர்கள் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி புஷ்ஷினைச் சந்தித்தனர்.

கென்ய ஜனாதிபதி டானியல் அராப் மொய் மற்றும் எதியோப்பிய பிரதமர் மெலிஸ் செனாவி ஆகியோரே வோஷிங்டனுக்கு வந்துள்ளனர்.

அண்மையில் கென்யாவில், இஸ்ரேலிய இரட்டை இலக்குகள் மீது தாக்குதல்கள் நடைபெற்ற பின்னர் இச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவமானதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை - மேலும் மேலும் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் கிழக்கு ஆபிரிக்காவில் எதிர்காலத்தில் நடைபெறலாம் என எச்சரிக்கை விடுத்துள்ள அமெரிக்காவிற்கு, மிக நெருங்கிய நண்பர்களான - எதியோப்பியாவும் கென்யாவும், உலக பயங்கரவாத ஒழிப்பில் உறுதுணையாக இருப்பார்கள் என அச்சந்திப்பில் புஷ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரு ஆபிரிக்கத் தலைவர்களுடனான இச் சந்திப்பின்போது, அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கொலின் பவல், திறைசேரி செயலாளர் போல் ஓ நீல் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டொலெஸா றைஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அயோத்தி நகரில் பொலிஸார் குவிப்பு

## பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் 10 ஆண்டு நிறைவு

10 ஆண்டுகளின் முன் பாபர் மசூதி இடிக்கப்படுகின்றது.



(புதுடெல்கி)

அயோத்தியில் பாபர் மசூதி இடித்து 10 வருடங்கள் நிறைவு பெறுவதால் அங்கு இந்திய அரசாங்கம் பாதுகாப்பினை பலப்படுத்தியுள்ளது. 1992 டிசெம்பர் 06 ஆம் திகதியன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதால், நாடளாவிய ரீதியில் கலவரம் மூண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை அந்நினைவு தினத்தினை முன்னிட்டு பதற்றநிலை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் முக்கிய நகரங்களில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

அயோத்தியில் ஆயுதம் தாங்கிய 1500 பொலிஸார் முழுநேரக் காவலில் ஈடுபட்டுள்ளனர். அதே வேளை, அடுத்த வாரம் குஜராத் மாநிலத்தில் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் மதச்சண்டைகள் உருவாக்கப்படலாம் என்ற தயார்நிலையில் குஜராத் மாநில அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. குஜராத் மாநிலத்தில் கடந்த வருடம் இதே காலப்பகுதியில்- இந்துப் பாதயாத்திரிகர்கள் பயணம் செய்த ரெயி[illegible] தீயிட்டுக் கொழுத்தப்பட்டதும் அ[illegible]னைத் தொடர்ந்து வன்முறை மூண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.


**அன்பளிப்பு; அன்பளிப்பு, அன்பளிப்பு.**

எமது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி எமது ஸ்தாபனத்தில் மாணவர்களுக்கான நூல்கள், புத்தகங்கள், (அப்பியாசப்புத்தகங்கள் தவிர்த்து), உபகரணங்கள், காட்வகைகள், மற்றும் கல்வி சம்பந்தமான விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை 2000/- இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்பாக, ஒவ்வொரு 2000/- இற்கும் சைனாவில் (China) இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பாடசாலை புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்படும்

இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

**ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சி-279

**தமிழ்ப்பூங்கா (மல்ரி ஓவ் செற்) பதிப்பகம்**
**Thamil Poonga Multi Off set Printers**

பிரதான வீதி
Main st.
நெல்லியடி
Nelliady
கரவெட்டி
Karaveddy

தமிழ்ப்பூங்கா புத்தகசாலை

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த

**நேருக்கு நேர்**

காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-187)

**ராஜா**
யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த

**வில்லன்**

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)

**இதோ! யாழ்.நகரில்....**

**Yarl beach In**
**யாழ்.பீச் இன்**

- உல்லாசப் பயணிகள் சபையினால் அங்கீகரிககப்பட்ட ஒரே நிறுவனம்.
- 35 வருடகால அனுபவம் வாய்ந்தோரின் நிர்வாகமும் சேவையும்.
- இயற்கையான சூழலில் விருந்துபசாரம், திருமணக் கொண்டாட்டங்கள்.
- மூன்று நேர உணவு வசதி.
- வெவ்வேறான குளியலறையுடன் கூடிய தங்குமிட வசதி.

No - 8, Old Park Road,
Jaffna.
T.P.0777 - 242831

உரிமையாளர்
S.சிலுவைராசா.

# கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்கள் வரைபடங்களை இராணுவம் தந்துதவும்!

## உறுதி தரப்பட்டுள்ளதாக தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(ஒஸ்லோ)

வட - கிழக்குப் பகுதியில் படையினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு விரைவில் ஒத்துழைப்பு வழங்குவதாக படைத்தரப்பு தம்மிடம் உறுதி வழங்கியிருப்பதாக விடுதலைப்புலிகளின அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் செய்தியாளர்களிடம் பேசும்போதே தமிழ்ச்செல்வன மேற்கண்டவாறு தெரிவித்தார். கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான வரைபடங்களைத் தந்து உதவும்படி படையினரிடம் நாம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் ,இதுவரை அவ்வரைபடங்களை எம்மிடம் தரவில்லை. மிக விரைவாகத் தருவதாக உறுதி வழங்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தன்னைச் சந்தித்துப் பேசியதாக வெளிவந்த தகவல்கள் தவறானதென்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன் ரோக்கியோவில் அரசாங்கம் - புலிகள் பேச்சு!

## ரணிலின் ஜப்பானிய விஜயத்தில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சிமாநாடு அடுத்த வருடம் மே அல்லது யூன் மாதத்தில் ஜப்பானில் இடம்பெறும் என்று ஜப்பானியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு வெளிநாடுகள் பல ஆரதவு வழங்க முன் வந்திருப்பதையும் ஜப்பானிய பிரதமர் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளார்.

ஜப்பானில் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜப்பானிய பிரதமர் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக நடந்த பேச்சுவார்த்தையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிகளை ஜப்பானியப் பிரதமர் பாராட்டினார்.



"இலங்கையை மீண்டும் புனரமைப்போம்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாக யசுசி அகாஷி நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாடு ரோக்கியோவில் நடைபெறுவதற்கு முன்னர், இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பங்குபற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அங்கு நடத்துவதற்கு இரு பிரதமர்களும் உடன்பட்டுள்ளனர்.

### முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

(நெல்லியடி)

சமூக நலன்புரி அமைச்சினால் கிமாஸ் குறூப் கம்பனியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, மாத்தளை, இரத்தினபுரி, பொலநறுவை, மட்டக்களப்பு, பதுளை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு 9ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை கொழும்பு தலகேனவில் அமைந்துள்ள கல்வியியல் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் யாழ். மாவட்டத்திலிருந்து இரு முன் பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (13)

# லண்டனிலுள்ள தூதுவரை பதவி விலக்கக் கோரிக்கை!

லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவரான - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பாயிஸ முஸ்தபாவை பதவியிலிருந்து விலக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவிடம் பிரதி அமைச்சர் அதாவுல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாயிஸ் முஸ்தபா லண்டனில் தூதுவர் பதவியைக் கவனிப்பதை விட, அமைச்சர் ஹக்கீமின் சட்டதரணியாகவே இயங்கிக் கொண்டிருப்பதாகவும் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சர் ஹக்கீமுக்கு எதிரான நீதிமன்ற வழக்கில ஆஜரான சட்டத்தரணி, வழமையாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் வாதிடுபவர் என்றும் தெரியவருகின்றது.

# பொது நிர்வாக கட்டமைப்பை சீர்படுத்த புதிய நியமச் சட்டம்

## அமைச்சர் வஜிர அபேவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

அரச பொது நிர்வாகக் கட்டமைப்பு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து நியமச்சட்டம் ஒன்று விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பழைய நியமச்சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ள புதிய நியமச்சட்டமானது, தனியார் துறையைப் போன்று, அரச துறையையும் விரிவாக்கம் செய்வதற்கும் நவீன மயப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் தயாரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கைலாசபதி நினைவு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க.கைலாசபதியின் 20 ஆம் ஆண்டு நினைவு கருத்தரங்கு ஜும்மாப் பள்ளி வாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள, சிற்றி ஹோல் மண்டபத்தில், நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்குக்கு கவிஞர் இ.முருகையன் தலைமை தாங்குவார். திருமதி மனோன்மணி சண்முகதாஸ், தம்பி ஐயா கலாமணி, சோ.தேவராசா ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

# தற்காலிக வதிவிடங்களில் நெருக்கடி நடுத்தெருவில் வலி.வடக்கு மக்கள்!

(வலி. வடக்கு)

உயர் பாதுகாப்பு வலயக் கெடுபிடி காரணமாக இன்னமும் மீளக் குடியமர முடியாமல் உள்ள வலி. வடக்கு மக்கள் தற்போது தாம் தற்காலிகமாக குடியிருந்த வீடுகளையும் உரிமையாளர்களிடம் கையளித்துவிட்டு நடுத் தெருவில் நிற்கும் அல்லல் நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வலி. வடக்குப் பகுதியின் பெரும்பகுதி இன்னமும் படையினரின் வசம் இருந்து வருகிறது. அங்கு மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்படுகிறது.

இந்நிலையில் வலி.வடக்கு மக்கள் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் இதுவரை காலமும் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் - தற்போது இவ்வீடுகளின் உரிமையாளர்கள் கொழும்பிலிந்தும், வவுனியாவிலிருந்தும், வன்னியிலிருந்தும், ஏனைய பிற பகுதிகளிலிருந்தும் யாழ்.குடாநாட்டுக்கு வந்து தமது வீடுகளை கையளிக்குமாறு வற்புறுத்துவதாக வலி. வடக்கு மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக, தாம் இருந்த வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்துவிட்டு, தாம் நடுத்தெருவில் நிற்பதாக ஏராளமான வலி. வடக்குப் பகுதி மக்கள் மிகுந்த வேதனையுடன் கூறுகின்றனர். (105)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பொலிஸாரின் துப்பாக்கிகள் அபகரிப்பு

மாத்தளை நுகஹகமுல பஸ் தரிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த இரு பொலிஸாருக்கு, மிளகாய்த்தூளைத் தூவிவிட்டு, அவர்கள் வைத்திருந்த இரண்டு துப்பாக்கிகளை இனந்தெரியாத நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

### முதுகலைமாணி கற்கை நெறிக் கருத்தரங்கு

மதுரை காமராஜர் பல்கலைக் கழக முதுகலைமாணிப் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி தொடர்பான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று பி.ப 1 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கைக் காமராஜர் பல்கலைக்கழகம் சார்பான பிரதிநிதி நடாத்தவுள்ளார். இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதன் மூலம் இக்கற்கைநெறி தொடர்பான முழுமையான விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### முத்திரைகள் வந்துள்ளன

யாழ். பிரதம தபாலகத்திற்கு 500 ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் கிடைத்துள்ளன. இவற்றைப் பொதுமக்கள் கொள்வனவு செய்யலாம் என பிரதம அஞ்சல் அதிபர் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

### பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் வருகின்றனர்

சமாதானத்துக்கான சிநேகபூர்வ சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

"இயல்புநிலை மலர வழிதந்த சமாதானம், இனங்களுக்கிடையேயான உணர்வுப் பரிமாறல் மூலம் நீடித்து, நிலைபெற தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு" என்ற கருப்பொருளை மையமாக வைத்து இச் சுற்றுலா ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

### பயிலுநர் ஆசிரியர் உள்வாங்கல் கலந்துரையாடல்

பயிலுநர் ஆசிரியர்களை உள்வாங்குதல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (55)

### கொக்குவிலில் கழிவுகளால் துர்நாற்றம்

கொக்குவில் அம்பட்டப்பாலக் கால்வாயினுள் இறந்த மிருகங்கள், கழிவுப் பொருட்கள் வீசப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இப்பாலத்தைக் கடந்து பயணம் செய்வோரும், இப் பகுதியில் வசிப்போரும் இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும், இக்கால்வாயை சம்பந்தப்பட்டவர்கள் சீர்செய்வார்களாயின் இவ் அசௌகரியங்கள் குறையுமெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (108)



ஒஸ்லோவில் பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரை முதலிரு படங்களிலும் அமைச்சர் பீரிஸ், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கைலாகு கொடுத்து பிரியாவிடை பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# ஈ.பி.டி.பிக்கு ஆதரவாக ஜே.வி.பி ; நாடாளுமன்றில் பெரும் குழப்பம் !

## பிரேரணையால் சபை அல்லோலகல்லோலப்பட்டது

ஈ.பி.டி.பி. கட்சியை நெடுந்தீவில் அரசியல் பணியை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனக் கோரி ஜே.வி.பி. கொண்டு வந்த பிரேரணையால் நேற்றுமுன்தினம் பெரும் கூச்சலும் குழப்பமும் நாடாளுமன்றில் எழுந்தது. பிரேரணைக்கு எதிராக அமைச்சர் தி.மகேஸ்வரன் காரசாரமாக உரையாற்றினார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் ஜே.வி.பி உறுப்பினர் சந்திரசேகரன், ஈ.பி.டி.பி. நெடுந்தீவில் அரசியல் நடவடிக்கைகளை தொடர அனுமதிக்குமாறு கோரி பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இதன்போது இப்பிரேரணையை எதிர்த்து அமைச்சர் மகேஸ்வரன் காரசாரமாக உரையாற்றினார்.

"நெடுந்தீவில் 19 இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். இது ஈ.பி.டி.பியினரால் தான் நடந்தது. ஒவ்வொரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் மூன்று மனைவியர் உள்ளனர். நெடுந்தீவில் முன்னாள் உதவி அரச அதிபர் நிக்கலஸ் ஈ.பி.டி.பியால்தான் கொல்லப்பட்டார் என்பதை உறுதிசெய்து அவரின் மனைவி தந்த கடிதத்தை நான் இங்கு வைத்திருக்கிறேன். ஸ்ரீதர் தியேட்டர் உட்பட பல கட்டடங்களை இவர்கள் பலவந்தமாக கைப்பற்றி வைத்துள்ளனர். ஸ்ரீதர் தியேட்டர் கட்டடத்துக்கு வாடகை தரப்படுவதில்லை, என அதன் உரிமையாளர் அனுப்பிய கடிதமும் இங்குள்ளது.

நெடுந்தீவை விட்டல்ல, நாடாளுமன்றத்தை விட்டும் ஈ.பி.டி.பி. வெளியேற வேண்டும்" என மகேஸ்வரன் தனது உரையில் குறிப்பிட்டார். இதன்போது சபையில் கூச்சல்களும் குறுக்கீடுகளும் எதிர்த்தரப்பிலிருந்து எழுந்தன. இச்சமயத்தில், தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த ரவிராஜ் எழுந்து ஈ.பி.டி.பியைக் கண்டித்து உரையாற்றும்போது ஒரு கட்டத்தில் அவருக்கு அருகிலிருந்த ஜே.வி.பி. மற்றும் ஈ.பி.டி.பி. எம்பிக்கள் அவரைத் தடுக்க முற்பட்டபோது இது பெரும் கைகலப்பாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. பெரும் கூச்சலும் எதிர்த்தரப்பிலிருந்து கேட்டது. எனினும் பின்னர் சபை நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின.

## அடுத்த சில நாட்கள் மழைபெய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அடுத்த சில தினங்கள் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக வளிமண்டலத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வியாழன் முதல் நேற்று வரை 32.7 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது.

ஆகக்குறைந்த வெப்பநிலையாக 23.8 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# குப்பிளான் வடக்கில் மீள்குடியமர்வு அரசாங்க அதிகாரிகள் ஆராய்வு!

(வலி. வடக்கு)

குப்பிளான் வடக்குப் பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து அரச அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

குப்பிளான் கிராமத்தில் ஏனைய பகுதிகளில் ஏற்கனவே, மக்கள் மீளக் குடியமர்ந்தபோதும் குரும்பசிட்டிப் பக்கமாக உள்ள, குப்பிளான வடக்குப் பகுதியில் மட்டும் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

தற்போது இப்பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்தக் கூடியவாறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் அரச அதிகாரிகள்- இப்பகுதியில் உள்ள மக்களின் இருப்பிடங்களின் நிலை, இங்கு மீளக் குடியமரக்கூடிய நிலையில் உள்ள குடும்பங்களின் தொகை என்பன பற்றிய விபரங்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 60 குடும்பங்கள் வரை இப்பகுதியில் மீளக் குடியமர தயாராக இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (105)

## வடமாகாண அதிபர்கள் சங்க அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் அவசர செயற்குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தியசாலைக்கான மருந்து விநியோகம் எமது பொறுப்பிலில்லை!

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை வைத்தியசாலை, தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழேயே இயங்குவதாகவும் - இவ் வைத்தியசாலைக்கான மருந்து விநியோகங்களைத் தாம் செய்வதில்லை என்றும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# இடைக்காடு — வளலாய் பகுதிகளில் வீடுகள் படையினரின் கட்டுப்பாட்டில்

## மீண்டும் வன்னிக்குத் திரும்பும் மக்கள்!

(அச்சுவேலி)

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர் யாழ்.மாவட்டத்தில் குடியேற வந்த குடும்பங்கள் பல மீண்டும் வன்னி திரும்பிச் சென்றுள்ளன.

வளலாய், இடைக்காடு பகுதிகளில் குடியேற வந்தவர்களே இங்கு குடியமர அனுமதி வழங்கப்படாததால் மீண்டும் வன்னிக்கு சென்றுள்ளனர். சுமார் 20 குடும்பங்கள் இவ்வாறு மீளத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் குடியிருக்கும் வீடுகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் இவர்கள் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் மீளக் குடியமர வந்த சில குடும்பங்கள், அயலவர்களின் வீட்டில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர். இதனால் பல நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (76)

# இயற்கை மரண நிலையில் மனித உரிமை ஆணைக்குழு!

## நிதிப்பற்றாக்குறையே காரணமாம்

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குத் திறைசேரி நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமையால் இயற்கை மரணம் எய்தும் நிலையில் இருப்பதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட முடிவுக்குள் திறைசேரி 3.6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யாவிட்டால், இந்நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இது குறித்து அரச அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில், மனித உரிமை ஆணைக்குழு- மின்சார, குடிநீர் விநியோகப் பற்றுச் சீட்டுக்கள் உட்பட சில பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பிக்கவில்லை என்றும், இதனாலேயே இந்நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன், மனித உரிமை ஆணைக்குழுவை அரசு திட்டமிட்டுச் சாகடிக்க முனைவதான குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

# நவீன வசதிகளுடன் விபத்து சிகிச்சைப்பிரிவு யாழ். மருத்துவமனையில் அமைக்கப்படும்!

## 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் மிக நவீன வசதிகள் கொண்ட, விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இச்சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சுமார் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு முன் வந்துள்ளார். இந்த நிதியைப் பயன்படுத்தி இப் புதிய சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் விபத்துச் சம்பவங்களைத் தொடர்ந்து அதிகளவான நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே இச்சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இம் முயற்சியின் முதற் கட்டமாக இச்சிகிச்சைப் பிரிவுக்கென புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. மேலும் இக்கட்டடத்தில் இணைக்க வேண்டிய உபகரணங்களும், கருவிகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

மேற்படி திட்டத்துக்கான மதிப்பீடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் அடுத்த கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# வீரசிங்கத்தின் முயற்சியால் உருவாகியதே மக்கள் வங்கி

## நினைவு விழாவில் லயன் சமரசிங்க புகழாரம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு வகையான அடிப்படைகளின் ஊடாக 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதற்கிணங்க இந்த மண்ணிலே பலரை உருவாக்க முன்னின்றவர் அமரர் வீரசிங்கம். இந்த வகையிலே உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும்போது இடைத்தரகர்கள் மூலமாக நாம் அடைநத நஷ்டங்கள் ஏராளம். இவற்றை சீர்படுத்தும் ஒரு அமைப்பாகவே இன்றைய கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்குக் கைகொடுக்கின்றன.

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசங்கத்தின் நினைவு தினத்திலே கலந்துகொண்ட- பேராசிரியர் சண்முகதாஸ், நினைவுரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரியார் வீரசிங்கத்தின் தலைமை எங்கள் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

வீரசிங்கத்தின் ஞாபக மாகக் கட்டப்பட்ட இந்த மண்டபம் இங்கு நடைபெறுகின்ற வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்வுகளினூடாக அவரது புகழையும், சேவையையும் திறம்பட எடுத்துக் காட்டுகின்றது.

இன்னும் இன்னும் இந்த மண்டபம் சிறந்து விளங்கி அமரர் வீரசிங்கத்தின் சிறப்பு சகல உலகிற்கும் எடுத்துக்காட்டக் கூடிய வகையில் செயற்பட அதனை ஆக்கிய கூட்டுறவாளர்களுக்கும் எமதுமக்கள் நன்றியுடையவர்களே.

தொடர்ந்து, முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட லயன் சமரசிங்க உரையாற்றும்போது,

யாழ்.மாவட்டத்திற்கு மட்டுமன்றி இலங்கை முழுவதுமே சேவையாற்றியவர் திருவாளர் வீரசிங்கம் அவர்கள். சர்வதேச ரீதியிலும் கூட்டுறவுக்குப் பெரும் பங்காற்றியவர். அது இலங்கை முழுவதற்கும் கிடைத்த பெரும் மதிப்பாகவே இருக்கின்றது.

இன்று மக்கள் வங்கி என்று நாம் குறிப்பிடுவதுதான் முன்னர் கூட்டுறவு வங்கியாக இயங்கியது. இது பெரியார் வீரசிங்கத்தின் பெரு முயற்சியாலேயே உருவாக்கப்பட்டது.

இன, மதபேத மின்றி கூட்டுறவிற்காக உழைத்த பெரியாருக்கு நாம் செய்ய வேண் டிய நன்றிக் கடன்- அவரைப்போல நேர்மையாகவும் தியாகத்துடனும் செயலாற்றுதலே ஆகும் எனவும் லயன் சமரசிங்க தனது பேச்சில் தெரிவித்தார். (லி)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : அ.சசிப்பிரியா

முகவரி : சின்னாலடி, காரைநகர்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------

பெற்றார் ஒப்பம்

## வார்த்தை விளையாட்டு - 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 ன் | ■ | 3 |
| | ■ | 4 | | ம் | ஜா |
| ங் | 5 | ■ | 6 | | |
| 7 | ம் | 8 | ■ | 9 | |
| | | டை | ■ | | ■ |
| தி | | | 10 | | |

முழுப் பெயர் : ........................................
கற்கும் பாடசாலை : ........................................
கற்கும் தரம் : ........................................
முகவரி : ........................................

.............................. ..............................
கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. அரசன் ~ ஒத்தகருத்து.
4. யாத்திரிகர்கள் தங்கவும் அன்னதானம் வழங்கவும் கோயில்களில் கட்டப்பட்டிருப்பது.
6. உட்காரப் பயன்படும் தளபாடம்.
7. தற்காப்புக்காக சில மிருகங்களுக்கு உள்ளது.
9. வீடுகளில் காவலுக்கு உள்ள மிருகம்.
10. கை, இப்படியும் சொல்லலாம்.

### மேலிருந்து கீழ்

1. மரத்தைக் கொத்தும் பறவை.
2. வாங்கக் கூடாத ஒன்று ~ தலைகீழாக. (உறவுக்குப் பகை என்றும் சொல்லப்படும்)
3. அழகான இரண்டெழுத்து மலர்.
5. சிறுவயதில் நிலவை இப்படியும் அழைப்போம்.
8. சேலை, ஒத்த கருத்துடைய சொல்.
9. கொக்குப்போல இருக்கும் பறவை.

### வார்த்தை விளையாட்டு - 9 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாம்பு
3. தேள்
4. கடைசி
5. யன்னல்
6. அநீதி
7. ஏப்ரல்
8. அணில்
9. சிரசு

**மேலிருந்து கீழ்**

1. பாண்டவர்
2. புடையன்
3. தேனீ
6. அரசி
7. ஏணி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 11-12-2002
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவு செய்து பரிசு வழங்கப்படும்.

### வார்த்தை விளையாட்டு - 09

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**செல்வி.நிரோஜா சிவயோகநாதன்**
முருகமூர்த்தி கோயில் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

*2ஆம் பரிசு -*
**செல்வி.டிலக்ஷிகா உமாகாந்**
444, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

*3ஆம் பரிசு -*
**செல்வன்.யோகராஜா பாஸ்கரன்**
வல்லை வீதி,
தொட்டிலடி, சங்கானை கிழக்கு.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## பாடம் படித்த மான் குட்டி



காட்டில் தனது தாய், தந்தையோடு வாழ்ந்து வந்த மான்குட்டி, தான் பெரியவனாகிவிட்டேன் என்று நினைத்துக் கொண்டது. தனித்து உணவு தேடப்போவதாக அடம்பிடித்தது.

ஒரு நாள் தந்தை மான், அவசர அவசரமாக ஓடிவந்தது. அதைக் கண்ட மான்குட்டி "ஏன் இப்படி பயந்து ஓடி வருகிறீர்கள்?" எனக் கேட்டது.

அதற்கு தந்தைமான் "வேட்டை நாய்கள் துரத்துகின்றன" என்று கூறியது. "உங்களிடம் கொம்பு இருக்கப் பயந்து ஏன் ஓடிவருகிறீர்கள்?" என அது கேட்டது.

உடனே, மான்குட்டி "அவர்களுக்குச் சரியான பாடம் படிப்பிக்கிறேன்" எனக் கூறிக்கொண்டு, வேகமாக ஓடியது. தந்தை மான் கூப்பிடக் கூப்பிட அது திரும்பிப் பார்க்கவில்லை.

வழியில் வேட்டை நாய்கள் குறுக்கிட, அவற்றுடன் சண்டைக்குப் போனது. அப்போது எங்கிருந்தோ துப்பாக்கிக் குண்டுகள் பறந்து வந்தன. மான்குட்டி பயத்தில் ஓடி வந்து தந்தையின் இருப்பிடத்தை அடைந்தது.

மூச்சிறைக்க ஓடிவந்த மான்குட்டியிடம், "எப்போதுமே வேட்டை நாய்களுக்குப் பின்னால், வேட்டைக்காரன் வருவான், உடல்பலம் மட்டுமல்ல மூளையையும் பயன்படுத்தி சரியான இடத்தில் சரியான முடிவு எடுக்கவேண்டும்" என ஆலோசனை கூறியது தந்தை மான்.

அனுபவபூர்வமாக உணர்ந்த மான்குட்டி அதை ஏற்றுக்கொண்டது.

## காக்கையின் மூளை

அங்கம் - 2

தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
நல்லகுமார் கஜந்திகா
கற்கும் பாடசாலை :-
உடுவில் மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
படம் சேகரித்தல், கதை, பாட்டு, விளையாட்டு.

முழுபபெயர் :-
கனகலிங்கம் சிவானுஜன்
கற்கும் பாடசாலை :-
யா/இந்து ஆரம்ப பாடசாலை
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, சித்திரம், வானொலி கேட்டல்.





முழுப்பெயர் :-
காயத்திரி சுப்பிரமணியம்
கற்கும் பாடசாலை :-
யா/வர்ணி சைவப்பிரகாச வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:-
செல்வநாயகம் திலக்சன்
கற்கும் பாடசாலை :-
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், சித்திரம், வாசிப்பு.





முழுப்பெயர்:-
அ.சஞ்சீவ்
கற்கும் பாடசாலை :-
யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம், நடனம்.

## சின்னச் சின்னப் பாப்பா



சின்னச் சின்னப் பாப்பா
சிங்காரப் பாப்பா.
வண்ண வண்ண உடைதரித்து
வளையவரும் பாப்பா.

அன்னை தந்தை அகம்மகிழ
அமுதமான பாப்பா.
அன்னை ஊட்டும் பாலருந்தி
மழலை பேசும் பாப்பா.



மின்னலெனத் துள்ளி வந்து
கன்னல் மொழி பேசிடும்.
முத்தமழை தாய் பொழிய
முத்துதிர்க்கும் பாப்பா.

கள்ளமில்லாக் குமிண் சிரிப்பால்
கருத்தையீர்க்கும் பாப்பா.
கொள்ளையின்பம் தந்திடுவாள்
வெள்ளை உள்ளப் பாப்பா.

துன்பம் மிகும் வேளையிலும்
துயர் துடைக்கும் பாப்பா.
அன்பினாலே அடிமை கொள்ளும்
ஆண்டவனின் கொடையான பாப்பா.

- மதி -

## பழம் தருவாயா அணில்பிள்ளை

தாவிப் பாய்ந்து ஓடிச் செல்லும்
அணில் பிள்ளையாரே
கூவி நாங்கள் கத்துவது
கேட்கவில்லையா - நீ

காவிச் செல்லும் பழத்தில் பாதி
எமக்குத் தருவாயா?
பாலர் நாங்கள் பகிர்ந்து உண்டு
மகிழ்ந்திருப்போமே.

மரத்திலேறிப் பழம் பறித்தால்
வீழ்ந்திடுவோம் என்று
உரத்த குரலில் பேசிடுவர் எங்கள்
அப்பா அம்மா

பரந்த மனம் உள்ள அணிற்பிள்ளையாரே
பறித்துப் போகும் பழத்தில்
அரித்த பாதி போக - மீதி
எமக்குத் தந்திடுவாயா?

நா.நர்மதா,
யாழ்.கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலயம்.

## தெரிந்துகொள்ளுங்கள்

☆ சவூதி அரேபியாவில் உள்ள 'கிங் காலித்' விமான நிலையம்தான் உலகிலேயே உள்ள மிகப்பெரிய விமான நிலையம். இது 236 சதுர கிலோமீற்றா பரப்பளவுடையது. இது, பாரிஸ் மாநகரின் இரண்டு மடங்காகும்.

☆ பாரிஸ் நகரில் நாய்களுக்குக்கூட பொதுக் கழிப்பறைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

☆ உலகிலே அதிகளவில் விநியோகிக்கப்பட்ட நூல் பைபிள்தான். இது 349 மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

☆ கைரேகை ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக உள்ளது போலவே நாக்கில் உள்ள ரேகைகளும் தனித்துவமானவை. ஒவ்வொருவருக்கும் இது வேறுபடும்.

☆ இரத்தம் ஒரு முறை உடலில் சுற்றிவர 60 செக்கன்கள் எடுக்கும்.

☆ நமது உடலில் 70 சதவீதம் நீரினால் உருவாக்கப்பட்டதாகும். சராசரி மனிதனின் உடலில் சுமார் 45 லீற்றர் நீர் இருக்கும்.

## உங்கள் கைவண்ணம்



இ.கௌரி நிஷா,
தரம் - 10 C,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை.
பருத்தித்துறை.



கனகலிங்கம் சிவானுஜன்,
தரம் - 2
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

## பொது அறிவுத் துளிகள்

1. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தலைமை அலுவலகம் - சுவிசர்லாந்திலுள்ள ஜெனிவா நகரில் அமைந்துள்ளது.
2. சீனாவின் முக்கிய பத்திரிகை - பீப்பிள்ஸ் டெய்லி.
3. சிலந்திப் பூச்சியின் கண்களின் எண்ணிக்கை - எட்டு.
4. அந்தமான் தீவுகளின் எண்ணிக்கை - 204
5. தேனீரை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு - சீனா
6. இறக்கைகள் இல்லாத பறவை - கீவி.
7. சாகும் வரை வளர்சியடையும் இயல்புடையது - மீன்
8. நிரந்தர நகரம் - றோம்
9. உதய சூரியன் நாடு - ஜப்பான்
10. நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே
11. ஆயிரம் ஏரிகள் நாடு - பின்லாந்து
12. இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக் கோழி
14. பாடும் மீன்கள் எங்குள்ளது - மட்டக்களப்பு

தொகுப்பு :-யேசுதாஸ் மரியமெற்றிலீன்
கிளி/பளை/றோ.க.த.க.பாடசாலை

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## எனது பாடசாலை

☆ எனது பாடசாலையின் பெயர் - யா/யூனியன் கல்லூரி.
☆ எனது பாடசாலை தெல்லிப்பளை எனும் ஊரில் உள்ளது.
☆ எனது பாடசாலை அதிபரின் பெயர் - திரு.சு.புண்ணியசீலன்.
☆ எனது பாடசாலையில் தரம் 06 முதல் தரம 13 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
☆ எனது பாடசாலையில் 40 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.

செ.கிரிஷா
யா/யூனியன் கல்லூரி

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................
திகதி

..............................
ஒப்பம்

..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம்

..............................
பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எந்தவொரு நெடும்பயணமும் எடுத்துவைக்கும் முதற்காலடியிலிருந்தே ஆரம்பிக்கிறது.*
*- நெப்போலியன்.*

# நமது நோக்கு

## நம்பிக்கையுடன் பயணம்!

நிரந்தர அரசியல் தீர்வொன்றினை நோக்கி நகரும் பெரும் பயணத்திற்கான கால்கோள் விழா - ஒஸ்லோவில் நடைபெற்றுள்ளது.

சர்வதேசத்தினது ஆசீர்வாதத்துடனும், அரசாங்கத் தரப்பினரது ஒத்துழைப்புடனும் ஆரம்பமாகவுள்ள இந்தப் பயணம் - தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் முக்கிய வரலாற்றுத் திருப்பம் எனக் கூறுவதில் தவறில்லை என்றே கூறலாம்.

ஒஸ்லோப் பேச்சுக்களில் ஆராயப்பட்ட, கனேடிய சமஷ்டி முறை முதலாக, இனி ஆராயப்படவுள்ள - உலகின் ஏனைய சமஷ்டி முறைகளதும் அனுபவத் திரட்டுடன் - அவற்றை எமக்கு ஏற்றவாறு, எவ்விதம் உள்வாங்க முடியும் என்ற பிரயத்தனங்களினதும் ஆராய்வுகளினதும் தேவை வலியுறுத்தப்பட்ட நிலையில், புதிய நகர்வுகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

இந்த நகர்வுகளின் தொடக்கப் புள்ளியாக, ஒரு ஆரம்பத் தளமாக - சமஷ்டி அமைப்பை இரண்டு தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், இந்தக் கட்டமைப்பிலிருந்து ஆராய்வுகள் தொடரும் என அறிவித்திருப்பதும் - தலைவர் பிரபாகரன் வலியுறுத்தும், தமிழ் மக்களுக்கான உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய, தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி அதிகாரம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேசத்தின் முன்னாலான இந்தப் பிரகடனமும் அறிவிப்பும் - தமிழ் மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இந்த முறையும் தவறிப் போய்விடாது என்ற திடத்தை ஏற்படுத்துகின்றன.

சர்வதேசம் ஏற்றுக்கொண்ட, உலக நாடுகளில் இயங்குகின்ற ஆட்சி முறைகளையே, தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது - சர்வதேசத்தின் நியாயத்தையும் ஆதரவையும் பெற்றுத்தரும் என்பது சந்தேகமற்றதொன்று.

சர்வதேசம் அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வுத் திட்டத்தையே தமிழர் தரப்பு பிரேரித்திருக்கின்றது என்ற நிலைப்பாட்டினை, உலக ஊடகங்களின் செய்தி வெளிப்பாடுகள் வாயிலாகத் தெட்டத்தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ள, தமிழர்களுக்கான ஆட்சியதிகாரம் - நியாயமானது, யதார்த்தமானது, ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது என்ற வகையில், உலக ஊடகங்களினதும் பார்வைகள் அமைந்திருக்கின்றன.

எனவே - இனிவருகின்ற தீர்வுக்கான முயற்சிகளில், உலக நாடுகளின் ஆதரவு என்பது வெளிப்படையானதொன்றாக அமைந்துள்ளது என்றே கூறலாம்.

இந்த வகையில் - ஒஸ்லோவில் பேச்சுக்களை முடித்துக்கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை - சுவிற்சர்லாந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தமது நாட்டுக்கு அழைத்திருப்பது முக்கியமான விடயமாகின்றது:

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அரச விருந்தினர்களாக அழைத்திருப்பதானது - மேற்கில் ஏற்பட்டுள்ள, ஈழத்தமிழர் பிரச்சினை பற்றியதும் விடுதலைப் புலிகள் பற்றியதுமான சரியான புரிதல்களை இனங்காட்டியிருக்கின்றது.

தமது நாட்டின் அரசியல் யாப்பு விவகாரங்கள் பற்றி, விடுதலைப் புலிகளுக்கு விளக்குவதும் கலந்துரையாடுவதும் என்ற சுவிற்சர்லாந்தின் நிலைப்பாடு - அரசியல் தீர்வை நோக்கிய பாதையில் கிடைத்துள்ள நல்லதொரு சமிக்ஞையாகும்.

எனவே - புதிய பயணம், இலங்கைத்தீவில் நிரந்தரமான, நியாயமான அமைதியைக் கொண்டு வரும் என்ற எதிர்பார்ப்பு, ஒஸ்லோ பேச்சுக்களின் பின்பு வலுப்பட்டுள்ளதென்றே உறுதியாகக் கூறலாம்.

# ஒஸ்லோ பேச்சுக்களில் இணக்கம் அமெரிக்க அரசாங்கம் வரவேற்பு!

(நியூயோர்க்)

ஒஸ்லோவில் நடைபெற்று முடிந்த அரசாங்க - புலிகள் தரப்புப் பேச்சுக்கள் திருப்தியளிக்கக் கூடியதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் இருந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பிரதிப் பேச்சாளர் பிலிப் றீக்கர் இது குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஒஸ்லோவில் இரண்டு தரப்புக்களுமே பிராந்திய ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் ஏற்படாதவகையில் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்த இணங்கியிருப்பது வரவேற்புக்குரியது.

இந்த இணக்கத்தை எட்டியதற்காக, இலங்கை அரசு - புலிகள் மற்றும் நோர்வே ஆகிய தரப்புக்களுக்கு அமெரிக்கா கௌரவமளிக்கிறது. இந்தப் பேச்சுக்களை முன்னேற்றமாகக் கொண்டு ஜனநாயக அடிப்படையிலும், மனித உரிமைகளைக் காக்கின்ற வகையிலும் பேச்சுக்கள் நடக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. அத்துடன் இலங்கையில் வாழும் சகல இன மக்களினதும் நலன்கள் பாதுகாக்கப்படும் என்றும் அமெரிக்கா நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி குழுவினர் குடாநாட்டு நிலை குறித்து ஆராய்வு!

## கல்வி, குடிநீர் வழங்கல் உதவிகள் குறித்து பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூகசேவைப்பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்று முனதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் பங்கு கொண்டனர்.

யாழ்மாவட்டத்தில், எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு சாத்தியமான செயற்திட்டங்கள் குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

குடாநாட்டின் கல்வி வளர்ச்சி மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற விடயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியைப் பெறறுக் கொள்வது குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

இவற்றை விட யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உதவித்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலைத் தொடர்ந்து - யாழ்.மத்திய கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்.பல்கலைக்கழகம் ஆகிய இடங்களுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் சென்று பார்வையிட்டனர். (க)

# ரவூப் ஹக்கீம் மீதான தடை கொழும்பு நீதிமன்றால் நீக்கம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கட்சி விடயங்களில் தலையிட விதிக்கப்பட்டிருந்த தடையை கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் நீக்கியது.

ஹக்கீம் மீது தடையை விதிக்குமாறு கோரி அதாவுல்லா சமர்ப்பித்த மனுவில், ஹக்கீமை கட்சியிலிருந்து நீக்கியதாக குறிப்பிட்டு எந்த வாசகமும் காணப்படவில்லை எனக் குறிப்பிட்ட கொழும்பு நீதிவான், ஹக்கீம் மீதான தடையை உடனடியாக ரத்துச் செய்வதாக தீர்ப்பளித்தார். (01)

# இரண்டு அமைச்சுப் பொறுப்புகளை ஜனாதிபதி பறித்துக்கொள்வார்?

(கொழும்பு)

ஐ.தே.மு அரசாங்கத்திடம் உள்ள இரண்டு முக்கிய அமைச்சுப்பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சு ஆகியனவே ஜனாதிபதி சந்திரிகாவினால் பறிக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

இந்த அமைச்சுக்கள் சரிவரத் தொழிற்படாததைக் காரணமாகக் கொண்டு தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்துறை அமைச்சிடம் இருந்து பொலிஸ்துறை அதிகாரங்களை ஜனாதிபதி பறிக்கவுள்ளதாக அனுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அரசாங்கத்தரப்புக்கள் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்புக்களை தன்னிச்சையாக எடுத்துக கொள்ள முறப்பட்டால் தாம் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவோம் என எச்சரிக்கை செய்துள்ளன.

# புதிய பொலிஸ் அணி நெடுந்தீவு சென்றது

(நெடுந்தீவு)

நெடுந்தீவிற்கு புதிதாக 35 பொலிஸார் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரி நெடுந்தீவு மக்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவருவதால், அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது. இப்பதற்றமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நெடுந்தீவிற்கு புதிதாக இப்பொலிஸ் அணி வந்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன், நேற்று முன்தினம் முதல், நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மக்களை, நெடுந்தீவில் வைத்துப் பொலிஸார் பதிவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (113)

# முஸ்லிம் காங்கிரஸில் பிளவு பின்னணியில் சந்திரிகா!

## ஜப்பானியச் செய்தி நிறுவனம்

(ரோக்கியோ)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்குச் ஜனாதிபதி சந்திரிகாவே முக்கிய காரணம் என்று ஜப்பானிய செய்தி நிறுவனமான 'கியோடோ' செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.தே.மு அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதே சந்திரிகாவின் நோக்கமாகும். சந்திரிகாவின் நடவடிக்கைகள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவினை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

தமது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் முயற்சிகளில் இரகசியக்கரம் ஒன்று இருப்பதாக அமைச்சர் ஹக்கீம் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கட்சிக்குள் பிளவு ஏற்படுவதற்கு ஒரு வார காலத்துக்கு முன்னதாக ஜனாதிபதி சந்திரிகாவை, அதாவுல்லா சந்தித்துப் பேசியதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், அதாவுல்லா இதை மறுத்துள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# வட - கிழக்கு புனரமைப்பு, அபிவிருத்திக்கு ஜப்பானிய அமைப்பு உதவ விருப்பம்

(ரோக்கியோ)

ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு ஏஜென்சி (Japan International Co-operation Agency), வட - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்யவும், அபிவிருத்தியை மேற்கொள்ளவும் உதவத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மேற்படி அமைப்பின் ஆளுநர் அயோ அக்கெய்ன் மிகோசவா தெரிவிக்கையில்,

தற்போது, இலங்கையின் வட - கிழக்குப் பகுதிகளில் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு உதவிகள் குறித்து ஆராய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதற்கென விசேட தூதுக்குழுவொன்றைப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்தார். இந்தத் தூதுக்குழு சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையின் அடிப்படையிலேயே தமது அமைப்பின் உதவித் திட்டங்கள் குறித்து வரையறுக்கப்படும் என்றும் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு ஏஜென்சியின் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# புட்டினின் இந்தியா, சீனா நோக்கிய விஜயத்தினால் சர்வதேச, பிராந்திய ரீதியில் எழும்பியுள்ள சர்ச்சைகள்

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மூன்று நாள் அரச விஜயமாக இந்தியாவுக்கு வருகை தந்திருந்தமை முடிந்த வாரத்தின் பிரதான அம்சமாக விளங்கியது. புட்டின் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு சீனாவுக்கு விஜயம் செய்ததுடன் அங்கு இராணுவ, பொருளாதார, தொழில்நுட்ப விடயங்களில் பரஸ்பர உடன்பாடுகளில் கைச்சாத்திட்டதும், அங்கிருந்து சில பிரகடனங்களை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது. ஈராக் மீதான ஆயுதப் பரிசோதனை அமெரிக்காவுக்கு எதிர்பார்த்த பலனை தராத சந்தர்ப்பத்தில், தனியாகப் போரை தொடங்குவது பற்றி, அமெரிக்கா தீவிரமாக முயற்சிக்கும்போது - புட்டினின் சீன, இந்திய விஜயங்கள் நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே, இவ்வாரம் புட்டினின் விஜயம் சர்வதேச மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் ஏற்படுத்தவுள்ள சர்ச்சைகளைப் பரிசீலிப்போம்.



ஜியாங் செமின்

புட்டினின் தலைமையிலான ரஷ்யா, அமெரிக்காவின் தான்தோன்றித்தனமான அதிகார விஸ்தரிப்புக் கொள்கைக்கு எதிரான அரசு என்பதைப் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளது. தற்போது அமெரிக்க விரும்பும் ஈராக் போரைத் தடுக்க, அடுத்த கட்ட ஒத்துழைப்பை பெறுகின்ற முயற்சியாகவே புட்டின்-சீனா, இந்தியா பக்கம் வருகை தந்துள்ளார். சீனா, ஏற்கனவே அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு நெருக்கடிகளையும், தடைகளையும் உருவாக்கி வருவதுடன், ரஷ்யா, பிரான்ஸ கூட்டுடன் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் செயற்பட்டு வருகின்றது. மேலும், அமெரிக்காவின் பொருளாதாரத்தின் வர்த்தக நடவடிக்கைகளிலும், சந்தை வாய்ப்புக்களையும் தக்கவைத்திருக்கும் அரசாக விளங்குகின்றது. இதனால் சீனாவின் ஒவ்வொரு நடவடிக்கையும், அமெரிக்காவின் சர்வதேச அரசியலையும், உலகளாவிய பொருளாதார நலன்களையும் பாதிப்படையச் செய்யும் என்பதனை ஒருபோதும் நிராகரிக்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் சீன - ரஷ்ய நெருக்கம் மேலும் அமெரிக்காவின் விஸ்தரிப்புக் கொள்கைக்கு நெருக்கடியாக அமையும்.

சீனாவுடன் ரஷ்யா நெருங்கி வருவது இரு அரசுகளுக்குமே இலாபகரமானது. தற்போது சித்தாந்த ரீதியான போட்டித்தன்மை முடிவுககு வந்துவிட்டதால், தமக்குள் எழும் முரண்பாடுகள் தளர்ந்திருப்பதுடன் எல்லை நாடுகளாகவும் விளங்குகின்றன. இதனால், பொருளாதார மறுசீரமைப்பை ஏற்கனவே ஒரு தடவை அமுல்செய்த சீனா, மீண்டும் மறுசீரமைப்புக்கு தயாராகி வருகின்றதும், ரஷ்யா தற்போது பின்பற்றிவரும் மறுசீரமைப்பின் முன்னேற்றமும் புதிய அரசியல், பொருளாதார சமநிலைக்கான அடிப்படைகளாக அமைவது தவிர்க்க முடியாததாகலாம். சீனா, பொருளாதாரத்தினை விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் நவீனமயப்படுத்துவதில் வெற்றி கண்டது போல், கடந்தகாலத்தில் ரஷ்யாவும் இராணுவத்தினை விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியான மயப்படுத்தலுக்குள் தக்கவைத்துள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் அதிகமானதாக அமையும்.

சீனாவுக்கு புட்டின் சென்றமைக்கான முக்கியத்துவத்தைக் காட்டிலும் - இந்தியாவுக்கு அவர் வருகை தந்திருப்பதே புதிய குழப்பங்களை அதிகரித்துள்ளது. இரண்டு நாடுகளுமே மிக நீண்டகால நெருக்கத்தையும், நட்பையும் கொண்டிருந்தாலும் - புதிய உலக ஒழுங்கு தயாரான பின்பு, இந்திய - அமெரிக்க கூட்டு வலுவடையத் தொடங்கியதால் பல பாதிப்புகள் ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டது. ஆனாலும் - ரஷ்யாவோ, இந்தியாவோ முற்று முழுதாக உறவை, நெருக்கத்தினை உதறித்தள்ளவில்லை என்பது கடந்த காலத்தில் நிகழ்ந்த மாறுதலுக்கூடாக அடையாளம் காணமுடியும். ஆனால், யெல்ஸினைப் போலல்லாது, புட்டின் மேற்குலகத்திற்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகள் இந்தியாவை பாதிக்கவே செய்தன. அந்த வகையில், புட்டின் இந்தியாவுக்கு வந்திருப்பது அமெரிக்க நலன் விரும்பிகளுக்கு அதிர்ச்சியான செய்தியாகவே அமையும். குறிப்பாக இந்தியாவுக்கு வருகை தந்த புட்டினை பாரம்பரிய முறைப்படி இந்தியர்கள் வரவேற்றமையும் ஊடகங்கள் மற்றும் ஆட்சித்துறையினரும் புட்டினுக்கு கொடுத்த மரியாதையும், கௌரவமும் அமெரிக்காவுக்கு எரிச்சலை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கும்.



புட்டினும் வாஜ்பாயும் டெல்கியில் சந்திப்பு.

புட்டினும் - வாஜ்பாயும் கையெழுத்திட்ட டெல்கிப் பிரகடனம் இரு நாடுகளுக்குமான நெருக்கத்தினை அதிகரித்துள்ளதாக பொருள் கொள்ளலாம். ஏறக்குறைய எட்டு உடன்படிக்கைகள், துறை ரீதியாக ஒப்பந்தமாகியுள்ளன. வர்த்தக பரிவர்த்தனையை ஏற்படுத்துதல், தொழில்நுட்பத்தினைப் பரஸ்பரம் கைமாற்றிக் கொள்ளுதல், கலாசார அம்சங்களைப் பராமரித்துக் கொள்ளுதல், தொலைத் தொடர்புத்துறையை விருத்தி செய்து கொள்ளுதல், அறிவியல் தொழில்நுட்பத்திற்கான விருத்திகளை உருவாக்குதல் எனப் பல விடயங்கள் இரு நாடுகளினாலும் உடன்பாட்டுக்கு வர முடிந்தது. இவற்றைவிட மிக முக்கியமான விடயமாக அமைந்திருப்பது - பயங்கரவாதத்திற்கு எதிராக இரண்டு நாடுகளும் கூட்டாகத் தொழிற்படுவது என்பதாகும். இதில் ரஷ்ய ஜனாதிபதி, பாகிஸ்தானின் பயங்கரவாத நடவடிக்கைகளை மறைமுகமாக கண்டித்ததுடன், இந்தியா அண்மையில் எழுப்பியுள்ள, சர்ச்சையான பேரழிவு ஆயுதங்கள் பயங்கரவாத அமைப்புகளிடம் கைமாறும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதனை புட்டின் சர்வதேச மயப்படுத்தியதுடன் அமெரிக்க - பாகிஸ்தானிய நெருக்கத்தினையும், அமெரிக்காவின் இரட்டைவேடப் போக்கையும் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். புட்டின் சீனாவில் நின்று கொண்டு நேரடியாகவே அமெரிக்காவை கண்டித்திருந்தார். ஆனால் இந்தியாவில் அவ்வாறு செய்யாது, பாகிஸ்தானை வெளிப்படையாக கண்டிப்பதன் மூலம், அமெரிக்காவுக்கு எச்சரிக்கை செய்வது போன்று நடந்து கொண்டார். பாரதீய ஜனதாக் கட்சி ஆரம்பத்தில் அமெரிக்க நெருக்கத்தை கடைப்பிடித்தபோதும், தற்போது அமெரிக்காவின் பிராந்தியக் கொள்கையினால் விரக்தியடைந்துள்ளது. பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சித் தலைமைகளின் நிலையை புரிந்து கொண்டவர்போல் புட்டின் நடந்து கொண்டார் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். மேலும் அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட பயங்கரவாதம் என்ற சுலோகத்தைத் தற்போது அமெரிக்கர்களுக்கு எதிராகவே புட்டின் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார். ஏனெனில், பாகிஸ்தானின் தயவில் இயங்கும் பயங்கரவாதத்தினைக் கண்டிக்காத அமெரிக்காவை எதிர்த்து, அப்பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியாவுடன் ஒப்பமிட்டுள்ளமை, செச்னிய விவகாரத்தினை புட்டின் எப்படிக் கையாளப் போகிறார் என்பதை அமெரிக்காவுக்கு உணர்த்தியுள்ளது. அதுமட்டுமன்றி - சீனா, இந்தியா இரண்டு நாடுகளுமே ஈராக் விவகாரத்தில் புட்டினை ஆதரிப்பதனால், புட்டினின் இந்த விஜயம் புஷ்சின் அடுத்தகட்ட தயார்ப்படுத்தலைப் பாதிக்க வைத்துள்ளதுபோல் தெரிகின்றது. போரை எப்படியாவது தொடங்க வேண்டுமென்ற அமெரிக்க ஆளும் வர்க்கத்தினருக்கு புட்டின் மறைமுகமாக இன்னோர் செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

ரஷ்யாவின் பொருளாதாரத்தினை கட்டி வளர்க்க முயற்சிக்கும் இச்சந்தர்ப்பத்தில், இராணுவத் தளபாடங்களை வர்த்தக ரீதியில் கையாள விரும்புகின்ற நிலை - சீனாவுடனும், இந்தியாவுடனும் செய்யப்பட்ட உடன்பாட்டில் காணப்பட்டுள்ளது. பாரிய ஆயுதங்களை சீனாவுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் வழங்கும் நிலையை புட்டின் வெளிப்படுத்தியுள்ளார். 350 வகையான ஆயுதத் தளபாடங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கான வர்த்தக உடன்படிக்கையில் புட்டின் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவத்துக்கான இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட புட்டின், சர்வதேச அரங்கில் இந்தியாவுடன் கூட்டாக தொழிற்படப் போவதாகவும் அறிவித்துள்ளார். இவை எல்லாம், அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்தின் நடவடிக்கைக்கு எதிரான தயார்படுத்தலும், அணுகுமுறையும் என்பதனை நிராகரிக்க முடியாதுள்ளது. புட்டின் விஜயம், புஷ்ஷிற்கு நெருக்கடியாக உள்ளதென்பதுடன், ரஷ்யா - சீனா - இந்தியா கூட்டு தயாராகிவிடுமா என்ற அச்சத்தினையும் அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக இதே பந்தியில் பல தடவை குறிப்பிடப்பட்டுள்ளமை நினைவுகூரத்தக்கது.

புட்டினின் விஜயத்தினை இந்தியர்கள் கையாண்ட முறைமை, பிராந்திய ரீதியாக பல சர்ச்சைகளை ராஜதந்திரிகள் மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கும் - ரஷ்யாவுக்கும் நெருக்கம் அதிகமாக இருந்தாலும், அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாறுதலினால் அதன் வடிவம் வேறுபட்டிருந்தது. ஆனால், அமெரிக்காவின் அண்மைக்காலக் கொள்கையினால் இந்திய ஆளுந்தரப்பு அதிருப்தி அடைந்துள்ளது. பாகிஸ்தானைக் கையாளும் முறைமையில், அமெரிக்கா பின்பற்றுகின்ற இரட்டைவேடத்தினையும், அதனால் - அமெரிக்கா பக்கம் இந்தியா இல்லை என்பது மட்டுமல்ல, அமெரிக்காவின் ஏமாற்றுத்தனத்திற்கு எடுபடாது இந்தியா என்பதையும் காட்ட வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் - புட்டினின் வருகையைச் சரியாக பயன்படுத்தி அமெரிக்காவுக்கு இந்தியா எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்கா, பாகிஸ்தானை மட்டுமல்ல தென்னாசியப் பிராந்தியத்தினையே தனது கட்டுப்பாட்டுக்கும் அதிகமான தலையீட்டுக்குள்ளும் உட்படுத்த முயலுகின்றது. நேபாளத்தில் ஏற்பட்டுள்ள மாவோயிஸ்டுக்களின் தாக்குதலை அடக்குவதென்ற போர்வையில், இந்தியாவின் வட - கிழக்குப் பகுதியையும், இலங்கை விடயத்தில் அமெரிக்கா எடுத்து வரும் பாரிய பிரயத்தனமும் இந்தியாவின் தென்பகுதியை நெருக்கடிக்குள்ளாக்குவதையும் இந்திய ஆளும்வர்க்கம் உணர்ந்துள்ளது. அதாவது - இந்தியாவைச் சுற்றி அமெரிக்கத் தளங்களையும், இராணுவ உறவுகளையும் ஊடுருவலையும் ஏற்படுத்தி வருவது இந்தியாவின் எதிர்காலத்திற்கு ஆபத்து மிக்கதாகவே அமையும். அத்தகைய ஆபத்தினைத் தவிர்க்க வாஜ்பாய் அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளில் ஒன்றாகவே, இந்திய-ரஷ்ய நெருக்கத்தினை மதிப்பீடு செய்யமுடியும். அண்மைக்காலமாக ஈராக்குக்கு ஆதரவாக இந்தியா பேசி வருவதும், அமெரிக்காவை கண்டிப்பதுபோல் நடந்து கொள்வதும் இந்தியாவின் பிராந்திய நலன் சார்ந்ததாகவே அமைந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்தியா குழப்ப முயல்கின்றது என்ற குற்றச்சாட்டும் இது சார்ந்ததாகவே நோக்கப்படுதல் பொருத்தமானதாக அமையும். இந்தியாவைப் பொறுத்தவரை, பிராந்தியத்திற்கு அப்பால் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ள தயாராகவுள்ளது. கிளிண்டன் நிர்வாகம் ஏறக் குறைய எப்படி சோவியத் யூனியன், இந்தியாவை இப்பிராந்தியத்தில் அகலக்கை வீசி செயல்பட அனுமதித்ததோ அப்படியே பின்பற்றி வந்தது. ஆனால், புஷ் நிர்வாகம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இப்பிராந்தியத்தை - அமெரிக்கா ஆதிக்க விஸ்தரிப்பின் இன்னோர் எல்லையாக அமைக்கத் திட்டமிட்டிருந்தது. அதனையே கடந்தகாலங்களில் அமுல்படுத்தி வருகின்றது. அதில் கணிசமான முன்னேற்றத்தையும் அமெரிக்கா அடைந்துகொண்டு வருகின்றது. ஆனால், தற்போது இந்தியா எடுத்துள்ள நடவடிக்கை பெரியளவான நெருக்கடியைச சந்தித்த பின்பே உரிய இலக்கை அடைய முடியும். அதனை இந்தியா அடைவதற்கு ரஷ்யாவின் உதவி மட்டுமல்ல, சீனாவின் ஒத்துழைப்பும் அவசியமானது.

எனவே, பரஸ்பரம் இந்தியா-சீனா - ரஷ்யா என்பன - அமெரிக்காவின் அரசியல், பொருளாதார, இராணுவ விஸ்தரிப்பை உலகளாவிய ரீதியில் மட்டுப்படுத்துவதுடன், பிராந்தியடிப்படையில் எழுந்துள்ள அதிகமான தலையீட்டை தடுக்கவுமே புட்டினின் விஜயத்தினை முதன்மைப்படுத்தியுள்ளன. புட்டின் விஜயம் - ரஷ்யாவுக்கு மட்டுமல்ல சீனாவுக்கும், இந்தியாவுக்கும் சாதகமான விளைவையே ஏற்படுத்தியுள்ளது - அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்திற்கே அதிர்ச்சியான செய்தியாகவுள்ளது. ✲

**கே.ரீ.கணேசலிங்கம்**

---

## ஓய்வூதியத் திணைக்களப் பணிகள் திணைக்களங்களுக்கு பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)

இதுவரை காலமும் ஓய்வூதியத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் இனிமேல அந்தந்த திணைக்களங்கள் ஊடாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள எடுக்கப்பட்டு வருகின்றது என்று அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் டிட்டா விமலசிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுற்றுநிருபங்கள் மூலம் - சகல அமைச்சுகளின் செயலர்கள், மாகாண சபையின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர் ஆகியோருக்கு அறிவிககப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு, இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம், பொலிஸ் நட்டஈடு, நாளாந்த சேவை பணிக்கொர்டை, உப அஞ்சல் அதிபர் மற்றும் உப - புகையிரத நிலைய அதிபர் பணிக்கொடை, பாதுகாப்புப் படையினரின் ஓய்வூதியங்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெறுதல் போன்றவை தொடர்பான ஓய்வூதிய நடவடிக்கைகள் இனிமேல் அநதந்தத் திணைக்களங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு வந்துள்ள பிரித்தானியப் போர்க்கப்பல்!

பிரித்தானிய றோயல் கடற்படை யைச் சேர்ந்த யுத்தக் கப்பலொன்று கடந்த 4 ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து கொழும்புத் துறைமுகத் துக்கு வந்துள்ளது.

ஆர்.எப்.ஏ.டிலிஜென்ஸ் என்ற பெயருடைய இக்கப்பல் போக்லாண்ட் யுத்தத்தின்போது ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. மணிக்கு 12 கடல்மைல் வேகத்தைக கொண்டுள்ள இக் கப்பல் - 112 மீற்றர் நீளமானதும், 10 ஆயிரம் தொன் எடையைத் தாங்கிக் கொள் ளக்கூடியதுமாகும்.

## வன்செயல்களால் பாதிக்கப்பட்ட 42 அரச ஊழியருக்கு தலா 1லட்சம் நட்டஈடு

### புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்தில் வன் செயலால் பாதிக்கப்பட்ட 42 அரச ஊழியர்களுக்கு 42 லட்ச ரூபா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வன்செயலால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களின் 5500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் இவ்விண்ணப்பங்கள் யாழ. அரச அதிபர், பொலிஸ், கிராம சேவகர்களின் சிபார்சுகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வன்செயலால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஆறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் ஹக்கீமுக்கு ஆதரவாக

# மருதமுனையில் பெரும் ஆர்ப்பாட்டம் !

## அதாவுல்லாவின் கொடும்பாவியும் எரிப்பு !




(கல்முனையிலிருந்து சலீம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ஆதரவு தெரிவித்தும், எதிர்த்தரப்பினரான அமைச்சர் அதாவுல்லா குழுவினரது செயற்பாடுகளுக்கு வன்மையான கண்டனமும், எதிர்ப்பும் தெரிவித்தும் நேற்று மருதமுனையில் பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், அமைச்சர் அதாவுல்லாவின் கொடும்பாவியையும் எரித்தனர்.

கல்முனை பிரதேசசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுத தேர்தல் வேட்பாளருமான எம்.எச். எம்.சுபைரின் ஏற்பாட்டில் இலங்கை இஸ்லாமிய கலாசார அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இலங்கை இஸ்லாமிய கலாசார அமைப்பின் தலைவர் எம்.எச். எம். அமீன் தலைமையில், மருதமுனை மஸ்ஜிதுல் அக்பர் பள்ளி வாசல் முன்றலில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டதுடன், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு ஆதரவு தெரிவித்தும், அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் கோஷங்களை எழுப்பியதுடன், அமைச்சர் அதாவுல்லா உட்பட முஸ்லிம் காங்கிரஸின் எதிர்த்தரப்பு அணியினரை கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

"றோவின் வலையில் சிக்கிய அதாவுல்லாவின் ஆட்டம் எங்கே?' "ஹக்கீமின் சாணக்கியம் புரியாத அதாவுல்லா..." "தலைமைத்துவ ஆசைக்கு தனி அலகு என அதாவுல்லா மகுடம்" "சமூகத்தின் பெயரால் சமூகவிரோதி வெறியாட்டம்" என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்ததுடன்,

ஈற்றில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அமைச்சர் ஏ.என். அதாவுல்லாவின் கொடும்பாவி ஒன்றையும் எரித்தனர்.இதேவேளை முஸ்லிம் காங்கி ரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்காகவும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காகவும் துஆ பிரார்த்தனையொன்றும் நடைபெற்றது.




## நெடுந்தீவு படகுச் சேவை ஆரம்பம்

நெடுந்தீவில் நடைபெறும் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து தடைப்பட்டு இருந்த பயணிகள் போக்குவரத்து சேவை, இன்றிலிருந்து தினமும் ஒரு தடவை நடைபெறவுள்ளது.

நெடுந்தீவில் இருந்து காலை 8.30 மணிக்குப் புறப்படும் படகு குறிகாட்டுவானில் இருந்து மாலை 3.30 மணிக்கு மீண்டும் நெடுந்தீவு சென்றடையும்.

## டீசல் விலை குறைப்பு!

யாழ்.மாவட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் டீசலின் விலை நேற்று முன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுவரை காலமும் ஒரு லீற்றர் டீசலின் விலை ரூ. 38.35 ஆக விற்கப்பட்டது. தற்போது அது 34 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. (111)

## பௌத்த விகாரை

ஊர்காவற்றுறை வீதி சரவணைச் சந்தியில் மீண்டும் புத்த கோயில் அமைக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் வைரவர் கோவில் இருந்த இடத்தில், அவ் ஆலயம் அழிக்கப்பட்டு கடற்படையினரால் புத்த கோவில் கட்டப்பட்டதும். பின்னர் இனந்தெரியாதோரால் புத்த கோயில் அகற்றப்பட்டதும் தெரிந்ததே. (111)

## சமஷ்டி முறை வந்தால் பொ. ஐ. மு. எதிர்க்கும்

### அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு



இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டால் அதை பொதுஜன ஐக்கிய முன்னணி கடுமையாக எதிர்க்கும் என அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். தற்போது இந்திய சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் அவா, அரசும் புலிகளும் சமஷ்டி முறையை இலங்கையில் அமுல் செய்ய முயல்வதாக குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, ரணில் அரசு விரைவில் ஜனாதிபதியால் கலைக்கப்படும் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார் (01)

## சமஷ்டி முறையை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பை அரசு விரைவில் தயாரிக்கும்

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி அமைப்பினூடான புதிய அரசியலமைப்பை அரசாங்கம் விரைவில் தயாரிக்கும் என்று உயர் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் அதேவேளை, ஏனைய நாடுகளின் சமஷ்டி முறைகள் குறித்தும் ஆராயப்படும். அதேவேளை இந்த சமஷ்டி அமைப்பு குறித்து சரியான புரிந்துணர்வையும், விழிப்புணர்வையும் தென்பகுதி மக்களிடம் கொண்டு செல்வது தான மிகப்பெரிய பொறுப்பாகும்.

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் இருந்து இரண்டு படிகள் கீழிறங்கி வந்துள்ளனர். தனி நாட்டுக்கான தமது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி கூட்டாட்சி என்ற நிலைக்கு அவர்கள் வந்துள்ளனர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## மயக்க மருந்து தூவி நகைகள் கொள்ளை

### நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் மயக்க மருந்து தூவி நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நீர்வேலியைச் சேர்ந்த சதாசிவம் சிவமணி (வயது 55) என்பவர் நேற்று முன்தினம் புத்தூர் வைத்தியசாலைக்குச் சென்று, மதியம் 1.30 மணியளவில் நீர்வேலிச் சந்திக்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையால் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது,

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், மேற்படி நபரிடம் உரையாடிவிட்டு திடீரென மயக்க மருந்தினைத் தூவிவிட்டு அவர் அணிந்திருந்த பதினொரு பவுண் தாலியையும் இரண்டரைப் பவுண் காப்பையும் கழற்றிக் கொண்டு சென்றுவிட்டனர்.

மயக்க நிலையில் வீதியில் விழுந்து கிடந்த மேற்படி நபரை அவ்வழியால் வந்த உறவினர்கள் வாகனத்தில் ஏற்றி, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

## பொலிஸ் மா அதிபர் பின்னணியில் புலிகளும் தமிழ் அரசியல்வாதிகளும்

### குற்றஞ்சாட்டுகின்றார் கொட்டகதெனிய

பொலிஸ் மா அதிபராக ஆனந்தராஜாவை நியமிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழ் அரசியல்வாதிகளும் தூண்டுதலாக இருந்தார்கள் என்று முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் தற்போது சிஹல உறுமயக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக உள்ளவருமான எச்.எம்.வி.கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

பொலிசார் சிங்கள இனத்தின் உரிமைகளுக்காகவும், பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்தும் பாடுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆரம்ப காலத்தில் சண்டை தொடங்கியபோது, நான் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றினேன். அந்த நாளில் தமிழ் அரசியல்வாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இடமாற்றப்பட்டேன்.

1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்பட்டபடியால்தான் நான் இடமாற்றப்பட்டேன் என்றும் கொட்டகதெனிய மேலும் குறிப்பிட்டார்.

## இன்றைய நாள் இனிய நாள்

### 07-12-2002 - சனிக்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 21ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச திருதிமை - பகல் - 10.04 வரை அதன் மேல் சதுர்த்தி.

*நட்சத்திரம்* :- பூராடம் - பகல் - 9.49 வரை அதன் மேல் உத்தராடம்.

*ராகுகாலம்* :- 9.17 - 10.47

*சுபநேரம்* :- 3.17 - 4.47

**மேடம்** :- தேகசுகம் நன்று, பிதாவுடன் நல்லுறவு, சமூகசேவையில் கௌரவம், உற்சாகம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, பணக்கஷ்டம், தூரப்பிரயாணம் தவிர்க்கவும், புதிய காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, விருந்தினர் வருகை, மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, எதிரி கவலை, புதிய கடன் வசதி, வட்டிப் பணம் வரவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, புத்திரர் மகிழ்ச்சி, சமூகசேவையில் மதிப்பு, புகழ், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகக் குறைவு, மாதா கவலை, வைத்தியச் செலவு, வாகனச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, உற்சாகம், செய்தொழில் முன்னேற்றம், ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியின் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, சேமிக்கும் சிந்தனை இராது, மனச்சஞ்சலம், வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**தனு** :- தேகசுகம் நன்று, வீட்டில் உபசரிப்பர், மகிழ்ச்சி,பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி.

**மகரம்** :- தேகசுகக்குறைவு, கர்வநிலை, வீண்செலவு, மிதமிஞ்சிய உணவு, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, செய்தொழில் லாபம், தெய்வ வழிபாடு, அறிஞர் உறவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், புதிய தொழில் முயற்சி, சமூகசேவையில் புகழ், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

## வடமராட்சியிலும் வாந்திபேதி; சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை !

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் வாந்திபேதி அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேட்டினாலும் குடிநீரை கொதிக்க வைத்து அருந்தாமையாலும், இந் நோய் பரவிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டி, பருத்தித்துறை, துன்னாலை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக வைத்திய சாலை புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகின்றது.

வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்ட 10க்கு மேற்பட்டோர் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ நிபுணர்கள் நியமனமாவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனைக்கு பல மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அடுதத மாதம் முதல் வாரத்தில இருந்து இப்புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

குழந்தை மருத்துவ நிபுணர் ஒருவரும், நோயியல் மருத்துவ நிபுணர் ஒருவரும், முறிவு நெறிவு மருத்துவ நிபுணர் ஒருவரும், ரேடியோ கதிர் இயக்க மருத்துவ நிபுணர் ஒருவரும் இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்படவுள்ள மருத்துவ நிபுணர்களாவர்.

அதேவேளை, நாற்பது மருத்துவத் தாதி உத்தியோகத்தர்களும் இவ்வைத்தியசாலைக்குப் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

(க)

# துணைத்தளபதி ஜீவனின் நினைவுத்தூபி திறப்பு



லெப்.கேணல் ஜீவனின் தாயார் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் உள்ளே மட்டு-அம்பாறை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மருத்துவர் வாமன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகனேரியில் இராணுவத்தினருடனான மோதலில் கடந்த 06.12.2001 அன்று வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டத் துணைத் தளபதி லெப்.கேணல் ஜீவன் உட்பட்ட 8 வீரவேங்கைகளின் ஓராண்டு நிறைவை நினைவு கூரும் வகையில், ஜீவனின் நினைவுத்தூபி திறப்பும் மாவீரர்களின் புகைப்படங்களின் திரைநீக்கமும் நேற்று காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு இலுப்பட்டிச்சேனையில் நடைபெற்றது.

இங்கு நினைவுரையாற்றிய விடுதலைப்புலிகளின் மட்டு- அம்பாறை மாவட்ட மருத்துவப் பிரிவுப் பெறுப்பாளர் வாமன், மாவீரர்களது வழிகாட்டலில் தான் எமது தேசம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இன்று அரசியலிலே நாங்கள் ஓர் சம அந்தஸ்துடையவர்களாக, எங்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்காக வெளிநாட்டினுடைய மத்தியஸ்தத்துடன் எங்களது உரிமைகளைப் பற்றிப் பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்துகின்ற ஒரு நிகழ்வாக எங்களது மாவீரர்களது பயணம் அமைந்திருக்கின்றது என்றார்.

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஆலோசனைக்குழு அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி விடயங்களில் துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் வல்லுநர்கள் கொண்ட குழுவாக மேற்படி குழு அமைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது.

மேற்படி துறைசார் வல்லுநர்கள் குழு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு துணை ஆலோசனைச் சேவையை வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# சமாதானத்தின் மீதான அக்கறையை புலிகள் செயலில் காட்டவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கூறியதற்கிணங்க, உண்மையிலே சமாதானத்தில் அக்கறை இருக்குமானால் அதனை நடைமுறையில் விடுதலைப்புலிகள் காட்ட வேண்டும் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி, உடன்படிக்கை மீறல்களை விடுதலைப்புலிகள்தான் மீறி வருகின்றனரே தவிர இலங்கை அரசாங்கம் அல்ல எனவும் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளார்.

(01)

# தந்தையும் மகளும் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(வவுனியா)

முல்லைத்தீவு - முள்ளியவளையில் உள்ள பொன்நகர் நளாயினி குடியிருப்பில் நேற்றுமுன்தினம் தந்தையும் மகளும் கிணற்றில் விழுந்து மரணமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 2.30 மணியளவில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தின்போது கிணற்றில் தவறிவிழுந்த தனது மகளைக் காப்பாற்ற தந்தை முயன்ற வேளையிலேயே இருவரும் பரிதாபகரமாக நீரில் மூழ்கி மரணமாகினர்.

முள்ளியவளை அ.மி.த.க. பாடசாலை 5ஆம் ஆண்டு மாணவியான செ.தசீபா என்பவரும் இவரது தந்தையார் அரியகுட்டி செல்வம் (34) என்பவருமே பலியானவர்களாவர். இவர்கள் புன்னாலைக்கட்டுவனைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் எனத் தெரியவருகின்றது.

# பல்கலைக்கழகத்திற்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பல்வேறு உதவித்திட்டங்களின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவிவழங்க முன்வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூக சேவைப்பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்துகுகு விஜயம் செய்தனர். இக்குழுவினர் நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை குறித்தும், உடனடியான மற்றும் நீண்ட காலத் தேவைகள் குறித்தும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

(க)

# வன்னி நிர்வாகப் பணியில் 23 வணிகபட்டதாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியில் நிர்வாக மேலாளர் பதவிகளில் இருபத்திமூன்று வணிக,முகாமைத்துவ பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் பளை வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு:-

மு.கயல்விழி(கிளிநொச்சி), ச.போதினி(கிளிநொச்சி), செ.சதீஸ்குமார்(வவுனியா), சு.குகதாசன் (சாவகச்சேரி), பே.தயாளன்(பருத்தித்துறை), சு.பிரபாலினி (உடையார்கட்டு), சி.பொன்விழி(முல்லைத்தீவு), சி.விவேகானந்தன்(கரவெட்டி), சபா.அதிரதன்(கொக்குவில்), சு.சிவநேசன்(ஆனைப்பந்தி), மா.செல்வரட்ணம்(உடுப்பிட்டி), கு.ஆனந்தரூபி(ஓட்டுமடம்), பா.உமா(மாதகல்), ச.ராஜினி(யாழ்ப்பாணம்), சி.ரோகினி (யாழ்ப்பாணம்), ஜெ.ஜெசினி(சுன்னாகம்), வி.நந்தகோபன்(மீசாலை), மு.கயல்விழி(யாழ்ப்பாணம்), மொ.ஜெயசீலன்(யாழ்ப்பாணம்), ஜெ.சுபாஷினி(கோண்டாவில்), சி.சகஜா (கொக்குவில்), செ. கலைவாணி (நல்லூர்), கு.தர்மினி (புத்தூர்).

## பேச்சின்...

நான் பாராட்டுகின்றேன். இன்னும் நிறையச் செய்தாக வேண்டியுள்ளது. ஆனாலும் - இலங்கையிலுள்ள அனைத்துச் சமூகங்களினதும் தேவைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வை நோக்கிய முன்னேற்றத்தை நான் ஊக்கப்படுத்துகின்றேன் என்றும் ஓ பிரெய்ன் தெரிவித்தார்.

## ஒஸ்லோ...

உலகில் ஏனைய நாடுகளின் கருத்துக்கள், இந்திய அரசியல் கட்சிகளின் கருத்துக்கள், தமிழக அரசியல் கட்சிகளின் நிலை என்பவற்றை அவதானித்த பின்பே இந்தியா தனது கருத்தை அவதானத்துடன் வெளியிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமஷ்டி தொடர்பான இணக்கப்பாடு குறித்து, முழுவிபரமும் தெரியாதபடியால் தம்மால் கருத்து ஏதுவும் கூறமுடியாது என, பிரதான எதிர்க் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெய்பால் ரெட்டி தெரிவித்துள்ளார்.

எனினும், ஆட்சியில் உள்ள பி.ஜே.பி. கட்சியின் பொதுச்செயலர் இல.கணேசன் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளார்.

## புலிகள்...

வேண்டும் என்பதே ம.தி.மு.க வின் கருத்து என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை- இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் வரதராஜனும் இந்தப் புதிய இணக்க நிலையை வரவேற்றுள்ளார்.

## கூட்டமைப்பு...

உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள நெடுந்தீவு மக்களுடனும் இவர்கள் கலந்துரையாடினர். கூட்டம் ஒன்றும் அங்கு நடைபெற்றது. தொடர்ந்து எம்.பிக்கள் கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்துப் பேசினார். மாலையில் இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பினர்.

# இந்தியாவின் நிலைப்பாடுகளில் மாற்றமில்லை என்கிறார் அனுரா

(கொழும்பு)

புலிகள் தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. புலிகளுடன் இந்திய அரசாங்கம் சமாதானமான - இணக்க நிலைக்கு ஒரு போதும் வராது எனத் தெரிவித்தார் அனுரா பண்டாரநாயக்க. இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வு ஒன்று எட்டப்படுவதையே இந்தியா விரும்புகின்றது. இந்திரா காங்கிரஸ் கட்சி, பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க கோரும் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது எனத் தெரிவித்த அனுரா பண்டாரநாயக்க, தாம் இந்தியாவின் பல்வேறு அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் தெரிவித்தார்.



திருகோணமலை-தம்பலகாமத்தில் அடைமழை காரணமாக 2000 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவு. (படம்- கௌதமன்)

# வவுனியா பல்கலை. வளாகத்தில் பட்டப்பின் கல்விடிப்ளோமா நெறி

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திலும் பட்டப்பின் கல்வி டிபளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடம் மேற்படி கற்கை நெறியை நடாத்தவுள்ளது.

முதற்கட்டமாக ஐம்பது மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.மேற்படி கற்கைநெறியை ஆரம்பித்து வைப்பதற்கான வைபவம் நேற்று முன்தினம் வவுனியா வளாகத்தில் நடைபெற்றது. தமிழ் கல்வி வரலாற்றில் இப்புதிய கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டமை ஓர் புதிய அத்தியாயம் என, இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும்போது தெரிவித்தார்.

## நெடுந்தீவில்...

இது தொடர்பாக கடிதம் ஒன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவருக்கு கையளிக்கப்பட்டது. இக்கடிதத்தில் மேலும் - சமாதான முயற்சிகள் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், கடற்படையினரின் இத்தகைய கட்டுமீறிய செயல்களைக் கட்டுப்படுத்தி, புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வலுச்சேர்ப்பது தங்களது பாரிய பொறுப்பு என்பதனை வலியுறுத்துகின்றோம்.

இனியும் காலம் தாழ்த்தாமல் விரைந்து நடவடிக்கை எடுத்து, கடற்படையினரை நெடுந்தீவிலிருந்து முற்றாக வெளியேற்றி, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான் இல்லாத...

ஏதும் தெரிவிக்கவில்லை.

அரசு-புலிகள் இணக்கநிலை குறித்து தாம் பரிசீலித்து வருவதாக பொது ஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## இனவன்முறை ..

பழிவாங்கப்பட்டதான விடயத்தில்,65 பேருக்கான நஷ்டஈட்டினை வழங்கும் வைபவத்திலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதாகவும் ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பழிவாங்கல் போக்கினைக் கடைப்பிடித்து வருவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.